# பதினெண்மேற்கணக்கு நூல்கள் காட்டும் பண்பாட்டு மரபுகளும் இன்றைய சமூக நிலையும்

*முனைவர் மு. கீதா*
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஆலங்குளம், தென்காசி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/ 10.5281/zenodo.14958615

## முன்னுரை

பழங்கால மக்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டும் பண்பாட்டு கருவுலமே இலக்கியங்கள். அதில் சங்க இலக்கியம் மேன்மைமிகு கருத்து களை விதைக்கும் நிலம், அவற்றையே நாம் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்று குறிப்பிடுகிறோம். இப்படித் தான் வாழ வேண்டும் என்று முன்னோர்கள் வழிவகுத்த வரையறைக்குள்ளும் கட்டுப்பாட்டுக்குள்ளும் வாழ கற்றுக் கொடுக்கும் தத்துவவியல் அறிஞர்கள் நம் இலக்கியப் புலவர்கள். எப்படியும் வாழலாம் என்பது மரபும் அல்ல பண்பாடும் அல்ல. படித்ததோடு நின்று விடாமல் வாழ்வியலோடு ஒட்ட ஒழுகுவோமாயின் இவ்வுலகம் நிலை பெற்று நிற்கும்.

பண்புடையவரகள் இவ்வுலகில் இருப்பதால் தான் உலகம் இன்னும் அழியாது இருக்கிறது. இதனை, வள்ளுவர்.

**"பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்"[1]**

என்று குறிப்பிடுகிறார். சங்க காலத்தில் வாழ்ந்த மக்களிடம் நல்லொழுக்கம், நற்பண்புகள் தலைமுறை தலைமுறையாக கடத்தப்பட்டு சீரும் சிறப்புமாக பேணப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய மக்களிடம் பண்பாடு இல்லாதது மனவருத்தத்தையும் வேதனையையும் அளிக்கிறது. மரம் போல்வர் மக்கட்பண்பில்லாதவர் என்ற குறளும் பண்பாடு இல்லையென்றால் பாரதம் இல்லை என்ற வைரமுத்துவின் வரியுமே நினைவுக்கு வருகிறது. பண்பு இருந்தால் தான் மனிதநேயம் பாழ்படாமல் காக்க முடியும். எனவே பண்பாடு பற்றி பதினெண் மேற்கணக்கு நூல்கள் தரும் செய்திகளையும் இன்றைய சமூகநிலைப் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பாடறிந்து ஒழுகுதல்

உழவன் விதைப்பதற்கு முன்பு நிலத்தைக் கீறி உழுது உரமிட்டு விளைச்சலுக்கு ஏற்ற நிலமாக பக்குவப்படுத்துவான். பக்குவபட்ட நிலத்தில் விதைத்தால் மட்டுமே நல்ல மகசூலைப் பெற முடியும். அதுபோல மனிதனின் மனதை நல்வழிப்படுத்த பட்டறிவு பெற்ற சான்றோர்கள், அறிஞர்கள் தமது அனுபவங்களையும் படிப்பினைகளையும் ஏட்டில் எழுதி வைத்தனர். அதனை படித்து பண்பட்டு வாழ்வதே பண்பாடு.

மனிதன் பக்குவநிலையை அடைவதே பண்பாடு. நம்முடைய முன்னோர்கள் சொல்லி சென்ற வழிகளில் நாமும் பின்பற்றி செல்வோமாயின் அதுவே சிறந்த பண்பு இப்பண்பாட்டு அறங்கள் பற்றி,

**"ஆற்றுதல் என்பது ஒன்று அலர்ந்தவர்க்கு உதவுதல்**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்**
**அன்பு எனப்படுவது கூறியது மறாஅமை**
**நிறை எனப்படுவது மறை பிறா அறியாமை**
**முறை எனப்படுவது கண் ஓடாது ஊயிர் வௌவல்**
**பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்"[2]**

என்ற புலப்படுத்தி நிற்கிறது நெய்தல் கலட் பாடல். இந்த ஒன்பது வரிகளும் நாம் வாழும் வழியை நமக்கு நன்கு உணர்த்தும் தன்மை உடையவை. இம்முன்னோர்கள் சொன்ன செய்திகளை கேட்டு நடபடபோமாயின் நாமும் நம் சமுகமும் நலம் பெறலாம். அதைவிடுத்து முன்னோர்கள் சொன்னது மூடத்தனம் என்று மூளையில் தள்ளுவோமாயின் அல்லல் நமக்கே என்பதை புரிந்து கொண்டால் நாடும் சிறப்பால் நாடும் சிறக்கும்.

## இல்லறமும் நல்லறமும்

வீடு எப்படியோ நாடும் அப்படியே என்றார் பேரறிஞர் அண்ணா. இல்லறம் நல்லறமாயின் நாடு செழித்திடும் என்பது போல பண்புகளின் தொடக்கம் வீடு, பண்பாட்டின் அடித்தலம் இல்லறம். அது சரியாக அமைந்தால் தெரு சிறக்கும் தெரு சிறந்தால் நகர் சிறக்கும் நகர் சிறந்தால் நாடு சிறந்து வலம் பெறும். நல்லொழுக்கங்களின் தோற்றுவாய் இல்லறம் என்கிறார். இதனை

**"எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான்**
**மண்ணில் பிறக்கையில் அவர்**
**நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே"[3]**

என்ற வரிகளால் அறியலாம். புலமைப்பத்தனின் நீதிக்குத் தலைவணங்கு எழுதப்பட்ட பாடல் வரிகள் எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்த பொழுது குடும்பநலத்துறை சார்பாக மாநிலம் முழுவதும் எழுத வழிவகைபுரிந்தார். இதுவே இப்பாடல் வரிகளுக்கு அரசாங்கம் தந்த உச்ச கட்ட அங்கீகாரமாகும்.

மனைவி பிள்ளைகளோடு வீட்டிலிருந்து பொருளைத் தேடி பாதுகாத்து இல்வாழ்க்கையை நடத்துவதெல்லாம் பிறருக்கு உதவி செய்வதற்கே என்ற மாண்போடும் பண்போடும் வாழ்ந்தவர்கள் சங்க கால மக்கள் என்பதை,

**"ஒலிமன் கூந்தல் ஒண்ணுதல் அரிவை**
**நடுதல் கைதொழுது பரவும் ஒடியாது**
**விருந்தெதிர் பொதுகிதில் யானே என்னையும்"[4]**

புறநானுற்றில் பெண் ஒருத்தி நமது முன்னோர்கள் போர்கலத்தில் மாய்ந்து நடுதல் ஆகியதை அறிந்து நடுகல்லை தினமும் சென்று வழிபடுவதை வழக்கமாக கொண்டிருந்தால். அவல் அந்த நடுகல்லை வழிபடும் பொழுதெல்லாம் தனது மனைவிக்கு வரும் வறியவர்களையும் புதியவர்களையும் வரவேற்று விருந்துணவு இடுவதையும் தினமும் அவர்கள் தன் மனைவிக்கு உணவு உண்ண வரவேண்டும் என்று வேண்டி தன் முன்னோர்களின் நடுதல் முன் நின்று வழிபடுவாளாம். இது போன்ற எல்லா பெண்களும் விருந்தெதிர் படுகின்றதிறம் பெற்றால் சமூகம் சீர்படும் என்பதில் ஐயமில்லை.

## எண்ணான்கு அறங்கள்

அகத்தியர் குறிப்பிடுகின்ற எண்ணான்கு அறங்களும் சிறக்கும் நூலாக பதினென்கீழ்கணக்கு நூல்கள் திகழ்கின்றன. முப்பத்திரெண்டு அறங்கள் பற்றி,

1. "அன்னதானம்
2. ஓதுவித்தல்
3. சிறைபட்டோருக்கு உணவளித்தல்
4. ஊருக்கு உணவளித்தல்
5. கண்ணேநகற்றல்
6. பசுவுக்கு வாயுறை வழங்குதல்
7. ஆவினம் பெருக சேவினம் விடுதல்
8. தர்ம கல்யாணம்
9. நோய்க்கு மருந்து
10. எண்ணெய் ஈதல்

11. கடன் தீர்த்தல்
12. மடம் கட்டுதல்
13. மயிர்வினைஞர் நல்குதல்
14. வண்டிப் பாதை அமைத்தல்
15. சோலை அமைத்தல்
16. சிறகினம் சிறை நீக்கல்
17. ஈமக்கடன் கழித்தல்
18. கன்னிகாதானம் செய்தல்
19. சிறுவர்களுக்கு சிற்றுண்டி கொடுத்தல்
20. ஆவுரிஞ்சுதறி அமைத்தல்
21. மகப்பேறு பார்த்தல்
22. கண்ணாடி கொடுத்தல்
23. தண்ணீர் பந்தல் அமைத்தல்
24. ஆடை அழுக்கு களைதல்
25. சாலை அமைத்தல்
26. இல்லறம் இனிதே நடத்தல்
27. தண்ணீர் குளம் அமைத்தல்
28. செழுங்கிளை தாங்குதல்
29. வெற்றிலை பாக்கு அளித்தல்
30. குழந்தைகளுக்கு பால் கொடுத்தல்
31. சுமை இறக்க சுமை தாங்கி அமைத்தல்
32. இல்லறம் இனிதே நடத்துதல்"[5]

என்பனவாகும்.

### பிறருக்கு உணவிடுதல்

**"மருதம் சான்ற மருது தண்பணை**
**அந்தணர் அருகா அருங்குடி வியன்நகர்**
**அம்தண் கிடங்கின் அவர் ஆமூர் எய்தின்**
**வலம்பட நடக்கும் வலியுணர் எருத்தின்**
**உரன்கெழு நோன்பகட்டு உழவர் தங்கை**
**பிடிக்கை அன்ன பின்னுவீழ்**
**அமலை வெண்சோறு"[6]**

என்ற வரிகளில் யாராக இருப்பினும் பசி என்றால் உணவளிக்கும் மரபை சங்க கால மக்கள் பின்பற்றி வாழ்ந்தனர் என்பதை மேற்கண்ட சிறுபாணாற்றுப்படை வலியுறுத்தி நிற்கிறது. பாணன் மற்றொரு பாணனுக்கு ஆற்றுப்படுத்தும் போது ஆமுர் வழியாக நீங்க சென்றால் அங்குள்ள உழவர் தங்கைகள் அரிசிச்சோறு, நண்டுக் குழம்பும் இட்டு நம்மை நன்முறையில் உபசரிப்பார்கள். பகுத்துண்டு பல்லுரயிர் ஓம்பும் பண்பினை நத்தத்தனார் தமது நூலில் வெளிப்படுத்தி இருக்கிறார். மேலும் பரதவர்கள் கள் சுடுமீனும், எயினர்கள் புளிக்கறிசோறு, ஆமானின் சூட்டிறைச்சியும் வழங்கியதாக்கவும் அறிய முடிகிறது. மன்னர் நல்லியதோடன் தன் அரண்மனை நாடி வந்த பாணர்களுளுக்கு கள், மெல்லிய கலிங்க ஆடைகள், பல்சுவை உணவு, மற்றும் இறைச்சி, ஆடல், பாடல், இசை என மும்புலன்களுக்கும் விருந்தளித்த மாண்பினையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

### பெரும்பாணாற்றுப்படையில்

இடையரகள் திணையரிசிச்சோறு, பால் சோறும் எயிற்றியர். புல்லரிசிசோறும் கருவாடும், எயினர்கள் சோறும் உடும்புக்கறியும் அந்நணர்கள் கெற்நோறும் மோர், ஊறுகாய் போன்றவற்றை வழங்கியதாக பெரும் பாணன் மற்றோரு பெரும் பாணனுக்கு கற்றுப்படுத்தியதை கடியலுர் கூடுத் திரங்கண்ணன் குறிப்பிடுகின்றார்.

**"பார்வை யாத்த பறைதாள் விளவின்**
**நீழல் முன்றில் நில உரல் பெய்து**
**குறும் காழ் உலக்கை ஓச்சி நெடும் கிணற்று**
**நெல் ஊற்று உவரி தோண்டி தொல்லை**
**முரல் வாய் குழிசி முரி அடுப்பு ஏற்றி**
**வாராது அட்ட வாடூன் புழுக்கல்**
**வாடா தும்பை வாயவ பெருமகன்**
**ஓடா தானை ஓண் தொழில் கழல்கால்**
**செ வரை நாடன் சென்னியன் என்னே**
**தெய்வ மடையின் தேக்கு இலை குவைஇ நம்**
**வைதீர் கடும் பொடு பதம் மிகு பெறுகுவீர்"[7]**

பாலை நிலத்து மக்கள் எயிற்றியர். குரம்பை எனப்படும் குடிசையில் வாழ்ந்தனர். குடிசை "ஈச்சமர இலைமடல்களால் வேயப்பட்டிருக்கும். மான் தோல் விரித்து எயிற்றி படுத்திருப்பாள் செம்மறியாடு பக்கத்தில் முடங்கி கிடக்கும் ஒரு இருப்பால் செய்த கோலை எடுத்து கரம்பை நிலத்தை புழுதி பறக்க தோண்டினால் புல்லை எடுத்து பல் துலக்கினார். பல் வெண்மையானது. குடிசை வாழ் சமைந்தர் தொடங்கினாள். நெல்லை உலக்கையில்

குத்தி அரிசியாக்கினாள். பக்கத்தில் பார்வை வலையில் விழுந்த பறவைகளை பக்குவம் செய்து சலையத்தாள். நீண்ட வாணிக்கிணறு அதை தோன்டி ஊற்று நீரில் உலை வைத்தால். வாராதுபட்ட புழுங்கலை சமைத்து எயிற்றி தேக்கு இலையில் வைத்து விருந்தூட்டினால் என்பதால் அறியலாம். எனவே பிறருக்கு உதவும் மனப்பான்மையையும் உணவிட்டு மகிழும் உயரிய பண்பையும் சமூக மக்களுக்கு எடுத்து சொல்வது நமது கடமையாகும்.

தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கும் வழக்கம் சங்க கால மக்களிடமிருந்து பண்பாட்டு மரபு - இம்மரபை இளைஞர்களுக்கு கற்றுக் கொடுத்து சீர்மிகு வளமான சமூகத்தை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

### முன்றில் அமைப்பு முறை

பாணரகளும், மக்களும் நடை பயணமாக செல்லும் போது அவர்கள் ஓய்வெடுத்து செல்வதற்கும் விழாக்காலங்களில் உறவினர்கள் வந்து தங்குவதற்கும் அமைக்கப்பட்டது முன்றில் என்ற முறை அதனை

**"காதலர் உழையர் ஆகப்பெரிது உவந்து**
**சாறுகொல் ஊரின் புகல்வேன் மன்ற**
**அத்தம் நண்ணிய அம் குடி சீறூர்**
**மக்கள் போதிய அணில் ஆடும் முன்றில்**
**புலம்பல் போதிய புல்லென்று**
**அலம்பென் தோழி"**[8]

என்ற குறுந்தொகை பாடல் நமக்கு விலக்கி நிற்கிறது.

### அரசனும் அரசியலும்

அரசன் என்பவன் நீதி, நேர்மை, மிகசிறந்த அறிவு, நுண்மான நுழைபுலம் தொணடவனாக திகழ வேண்டும். அரசனானவன் அரசவையில் அமைச்சர்கள், புலவர்கள் ஆகியோரிடம் ஆலோசனை பெற்று விவாதித்து மக்களின் தேவை அறிந்து செயல்பட வேண்டும். பொதுவாக அரசவை காலையில் கூடுவது வழக்கம் அதற்கு நாளவை என்றும் நாளிருக்கை என்றும் பெயர், என்பதனை,

**"செம்மல் நாளவை அண்ணாந்து புகுதல்**
**எம்மன வாழ்க்கை இரவலர்க்கு எளிதே"**[9]

என்ற புறநானுறு பாடல் வரிகளால் அறியலாம், மேலும், அரசுமுறை தவறாது நீதி நெறியோடு மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களின் நிலையறிந்து செயல்பட வேண்டும் என்பதை

**"கருதியது முடித்தலும் காமுறப்படுத்தலும்**
**ஒரு வழிப் படாமையும் ஓடியது உணர்தலும்**
**அரியோர் உன்கண் அரிவையர் ஏத்த**
**அறிவுமடம் படுதலும் அறிவு**
**நன்குடைமையும் வரிசை அறிதலும்**
**வரையாது கொடுத்தலும்"**[10]

என்ற சிறுபாணற்றுப்படை பாடல் மூலம் அறியலாம்.

### நிதி மேலாண்மை

மன்னன் அறம் தவறி செயல்படும் போது அவனுக்கு அறிவுரைக் கூறி அரசனை நல்வழிபடுத்தினர் புலவர்களும் அமைச்சர்களும் என்பதை

**"காய்நெல் அறுத்து கவளங்கொளினே**
**மாநிறைவு இல்லதும் பல் நாட்காகும்**
**நூறு செறு ஆயினும் தனித்துப் புக்கு உணினே**
**வாய் புகுவதனினும் கால் பெரிது கெடும்**
**அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளின**
**தோடி யாத்து நாடு பெரிது நந்தும்"**[11]

என்ற பாடல் வரிகளால், உணர்த்துகின்றார் பிசிராந்தையர்.

பாண்டியன் அறிவுடை நம்பி நாட்டு மக்களிடம் அதிக வரி வசூலித்து வந்தான். அச்செயலை கண்டித்து கீழ்காணும் முறையால் அறிவுரை பகர்கிறார்.

ஒரு ஏக்கர் மூன்று பங்கு பரப்பளவு கொண்ட நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து சோறாக்கிக் கவலம் கவலமத்திரட்டி யானைக்கு தீனியாகக் கொடுத்தால் அது பல நாட்களுக்கு உணவாகும். ஆனால் நூறு வயல்களில் நெல் விளைந்து கிடக்கிறது என்று யானையை வயலில் புகுந்து நீயே உண் என்று சொன்னால் வாயல் செல்வதை விட மிதிபட்டு பாழாகும் நெல்லின் அழிவே மிகுதியாகும். அதுபோல மக்களின் நிலை அறிந்து மன்னன் வரி வசூலிக்க வேண்டும் மக்களை

வருத்தி வரி வசூல் செய்தால் அதன் விளைவு நாடே பாழாகிவிடும் என்பதை நிர்மலா சீத்தாராமன் அவர்கள் நிதி அமைச்சராக இருந்த பொழுது பட்ஜெட் தாக்கல் செய்துவிட்டு பேசிய போது இப்பாடல் வரியை சுட்டிக் காட்டியது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நிதி மேலாண்மை குறித்தும் சங்க நூல்கள் நமக்கு வழிகாட்டுகின்றன.

### முடிவுரை

பதினென்மேற்கணக்கு நூல்கள் அனைத்தும் நமது பண்பாட்டினை வெளிப்படுத்தி காட்டி நிற்கும் கண்ணாடி. அப்பண்பாட்டினை சிறந்த முறையில் நமது சமூகத்திற்கு அடையாளப்படுத்தி காத்திட வேண்டும். அவ்வாறின்றி நாகரீகம் என்ற பெயரில் இன்றைய சமூகம் நடத்தும் அவலங்களை கண்டும் காணாமல் செல்வோ மாயின் நாடே சிதைந்து சீர்கெட்டு விடும். இல்லற மாண்பு முதல் அரசியல் நிலை வரை உள்ள அனைத்து அறப்பண்புகளையும் வழங்கி, மனிதனை மனிதன் மதிக்கும் நற்பண்பினையும், மனிதநேயமிக்க மக்களையும் சமூகத்தையும் அரசியல் நெறிமுறைகளோடு செயல்படுத்த கூடிய அரசியலார்களை உருவாக்கிடவும் தமிழர்களின் பண்பாட்டையும் வாழ்வையும் மீட்டெடுக்க துணைபுரிவோம்.

### அடிக்குறிப்புகள்

1. திருக்குறள், பொருட்பால், குடியியல், பண்புடைமை அதிகாரம் குறல் எண்: 996
2. கலித்தொகை - 133வது பாடல்
3. நீதிக்கு தலைவனாக்கு - புலமைப்பித்தன் பாடல் வரிகள்
4. சங்க இலக்கியம் - எட்டுத்தொகை - புறநானுறு பாடல் - 174
5. உபமான சங்கிரஹம், இரத்தின சுருக்கம்
6. பத்துப்பாட்டு - சிறுபாணாற்றுப்படை - வரிகள் - 186-192
7. பத்துப்பாட்டு - பெரும் பாணாத்துப்படை வரிகள் - 95-105
8. எட்டுத்தொகை - குறுந்தொகை - பாடல் எண் - 41
9. எட்டுத்தொகை - புறநானுறு பாடல் எண் - 54
10. பத்துப்பாட்டு - சிறுபாணாற்றுப் பாடல் வரிகள் - 210-217
11. எட்டுத்தொகை - புறநானுற்றுப்பாடல் எண் - 184

### துணைநாற்பட்டியல்


1. பாட்டும் தொகையும் ஓர் அறிமுகம் டாக்டர். பாலசுப்பிரமணியன் பாரி நிலையம், 184 பிரகாசம் சாலை, சென்னை.
2. தமிழ் இலக்கிய வரலாறு முனைவர். சிற்பி பாலசுப்பிரமணியன் முனைவர். சொ. சேதுபதிகவிதாபப்ளிகேசன்ஸ், மாசிலாமணி தெரு, சென்னை
3. அகத்தியர் வரலாறு அ.சிதம்பரனார் கழக வெளயீடு சென்னை - 1964
4. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு தமிழண்ணல் மீனாட்சி புத்தக நிலையம் மதுரை - 2008
5. தமிழ்ப்பண்பாடு (சங்க காலம்) ராஜ் கௌதமன் நியு செஞ்சுரிபுக் ஹவுஸ் அம்பத்தூர் சென்னை